# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2261 - 2021 දෙසැම්බර් මස 31 වැනි සිකුරාදා - 2021.12.31

*2261ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | *1864* | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1865* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | *1869* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, சனவரி மாதம் 21ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, சனவரி மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1863- B 082304 - 405 (2021/12)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

இலங்கைப் புகையிரத சேவைக்கு Fish Plates,Bolts & Nuts and Spring Washers களை வழங்குவதற்கான பெறுகை

பெறுகை இலக்கம் SRS/ F-7772

01. இலங்கைப் புகையிரத சேவைகளிற்கு Fish Plates,Bolts & Nuts and Spring Washers களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால் (மேஜர்) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் அடிப்படையில் கோரப்படுகின்றது.விலைமனுதாரர்கள் தம் விலைமனுக்களை நேரடியாக அல்லது இலங்கையில் தர அங்கீகாரம் பெற்றுள்ள பதிவு செய்யப்பெற்ற முகவர் மூலம் மற்றும் அற்றோணி அதிகாரம் பெற்ற முகவர் மூலம் சமர்ப்பிக்கலாம். சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு பாவனையாளர் அழைப்பினால் செயற்பாட்டுச் சான்றிதழை உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் கொண்டிருத்தல் வேண்டும். அனைத்துப் பொருட்களும் மதிப்பீடு செய்யப்பட்டு ஒன்றாகவே ஒப்பந்தம் வழங்கப்படும்.

| உருப்படி இல. | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | Fish Plates 88 Lbs. | 4,000 சோடிகள் |
| 02 | Fish Bolts 80 Lbs. | 1,500 சோடிகள் |
| 03 | Crossing Bolts with Nuts 7"x7/8" | 4,000 Nos. |
| 04 | Crossing Bolts with Nuts 11"x7/8" | 2,000 Nos. |
| 05 | Bridge Hook Bolts & Nuts 14"x3/4 " | 1,000 Nos. |
| 06 | Spring Washers 27.5mm | 40,000 Nos. |

02. பிரதிப் பொது முகாமையாளரின் (பெறுகை) அலுவலகத்தில் அல்லது வெளிநாட்டு இலங்கை தூதுவராலயங்களில் (இலங்கை நேரம்) பி.ப. 3.00 மணி வரையும் 2022.01.26 ஆந் திகதியன்று மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 7,000 ரூபாவை அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. 2022.01.27 ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரை (இலங்கை நேரம்), விலைமனு திறக்கப்படும்.

04. விலைமனுதாரர் ரூபா 250,000.00 தொகைக்கான விலைமனுப் பிணையொன்றை வழங்கல் வேண்டும். அல்லது அவர்களின் விலைமனுவின் பகுதியொன்றாக இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முத்திரையிப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு (மேஜர்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*06. விலைமனுப்படிவங்களை இலவசமாக புகையிரத அத்தியட்சகரின் அலுவலகத்தில் பரீட்சிக்கலாம்.*

*தொலைபேசி இல. : 2438078 அல்லது 2436818.*
*தொலைநகல் இல. : 2432044.*
*மின்னஞ்சல்* : tender2@railway.gov.lk
*இணையத்தளம்* : www.railway.gov.lk

*தலைவர்,*
*திணைக்களப் பெறுகைக் குழு (மேஜர்),*
*இலங்கைப் புகையிரத சேவைகள்.*

*குறியீட்டு இல. :* SRS/F. 7772

*12- 671*

---

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளின் பிரகாரம் 2021.07.07 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுகிறது.*

*கம்பனியின் பழைய பெயர்:* புரொமிஸ் டூ அமாலியா லங்கா
*கம்பனியின் புதிய பெயர்:* மிசன் ஒப் ஹோப் லங்கா
*கம்பனி இலக்கம் :* GA 00212597
*பதிவு அலுவலகம்: 162/4*, ஸ்கூல் லேன், கிரிகம்பமுனுவ, பொல்கஸ்ஓவிட்ட, *10200*

எம். சிறிவர்தன,
கம்பனிச் செயலாளர்.

*12- 680*

---

## நோடெல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது) கம்பனியின் பதிவு இல. PV 676

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவிற்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 11, 3 ஆம் மாடி இல் அமைந்துள்ள* Board Room *இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அ-து,*

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது.
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்

ஜெராட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்.

நோடேல் இன்வெஸ்ட்மென்ட்ஸ்
(பிரைவேட்) லிமிட்டட்,
இலக்கம் *11, 3* ஆம் மாடி,
காசல் ஒழுங்கை, கொழும்பு *4*,
*2021*, திசெம்பர் *20*.

*12- 693*

---

## கம்பனியின் நிலபர மாற்றத்தினால் ஏற்பட்ட பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*“வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று” என்பதிலிருந்து “வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி” என அதனது நிலபரத்தை மாற்றியமையினாலும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் அதனது பங்குகள் பட்டியலிடப்பட்ட தத்துவத்தினாலும் 2021, திசெம்பர் 14 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(3) ஆம் பிரிவின் பிரகாரம் நாம் இத்தால் வழங்குகின்றோம்.*

*கம்பனியின் முன்னைய பெயர்:* சர்வோதய டிவலொப்மன்ட் ஃபினேன்ஸ் லிமிடட்

*கம்பனியின் இலக்கம் :* பீபி 3795
*கமபனியின் பதிவு அலுவலக முகவரி:* இல.155/ஏ,
டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,
கொழும்பு 8
*கம்பனியின் புதிய பெயர் :* சர்வோதய டிவலொப்மன்ட் ஃபினேன்ஸ் பிஎல்சி
*பெயர் மாற்றத்தின் திகதி :* 2021, திசெம்பர் 14

சர்வோதய டிவொலப்மென்ட் ஃபினேன்ஸ் லிமிடட்டிற்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யு கோர்ப்பரேட்
செக்கிரட்டேரியல் ( பீவீடி) எல்டீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

2021, திசெம்பர் 20.

12- 706

---

## ஒருங்கிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

சாஸ் பி . ஹேலீ அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் (PV 9034) மற்றும் லிக்னொசெல் (பிறைவேட்) லிமிட்டட் (PB 612 PV)

சாஸ் பி . ஹேலீ அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல.PV 9034), லிக்னொசெல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PB 612 PV) ஆகிய நிறுவனங்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ("சட்டம்") 242 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பது மேற்படி சட்டத்தின் 242(3) (பீ) பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் சாஸ் பி. ஹேலீ அன்ட் கம்பனி ( பிறைவேட்) லிமிட்டட் என்பதாகும். ஒருங் கிணைப்பானது 2022, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதியில் அல்லது கம்பனிகள் பதிவாளரினால் தீர்மானிக்கப்படும் திகதியில் நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகிய சாஸ் பி. ஹேலீ அன்ட் கம்பனி ( பிறைவேட்) லிமிட்டட்டின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்படும் நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடன் வழங்குநரும் ஒருங்கிணைக் கப்படும் நிறுவனமொன்று கடப்பாடு கொண்டுள்ள எவரேனுமொருவரும் வழமையான வியாபார நேரங்களில் ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்ற முகவரியில் பார்வையிடலாம்.

சாஸ் பி . ஹேலீ அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
லிக்னொசெல் (பிறைவேட்) லிமிட்டட்
என்பவற்றின் சபைகளின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்)
லிமிட்டட்,
செயலாளர்கள்.

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2021, திசெம்பர் 22.

12- 707

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கேகாலை மாவட்டத்தின் 291, மேபீல்ட் வத்த, பல்லபான, கலிகமுவ நகரத்தில் வசிப்பவரும் 885052835V என்ற இலக்கத்தைக் கொண்டுள்ள தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய வீர பந்துலாகே சச்சி நிலக்ஷி தயாநந்த ஆகிய நான், கேகாலை, கலிகமுவ நகரம், பல்லபான, மேபீல்ட் வத்த, B 291 என்ற முகவரியைச் சேர்ந்தவரும் 70580459V என்ற தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய ஒலிந்துரகே தீபா சந்தகுமாரி அனோஷா என்ற பெயருடைய எனது அம்மாவிற்கு அற்றோணித்தத்துவக்காரர் என்ற ரீதியில் தயாரிக்கப்பட்ட 22300 என்ற இலக்கமும் 2019, மே 13 ஆந் திகதியன்று கேகாலை பிரசித்த நொத்தாரிசு திரு. றொமெல் விஜேவர்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டதாகும்.

இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் என்னால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது அகற்றப்பட்டு வெற்றும் வெறிதாக்கப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவத்தை நான் மேற்குறிப்பிட்டவருக்கு வழங்க மாட்டேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(வீர பந்துலாகே சச்சி நிலக்ஷி தயாநந்த,
அற்றோணித்தத்துவக்காரர்).

12- 718

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், நுகேகொட, பாகோட பாதை இலக்கம் 85/11 உடன் தற்பொழுது பொரலஸ்கமுவ,

தெஹிவளை பாதை, முதலாம் குறுக்குத்தெரு இலக்கம் 08 இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் (193717801889) உடைய ஜினசிறி லால்மித்ர ஹெவா பதிரன என்பவரால் எனக்கு மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், றாகம, வெலிசர வத்த இரண்டாம் குறுக்குத் தெரு இலக்கம் 25 இல் வசித்த தற்பொழுது கனடா நாட்டில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் (685201950V) உடைய விஜயபுரகே ஷர்லின் றோஹினி பிரனாந்து என்பவரின் உரிமை அதிகாரத்தில் தற்காலிக உரிமைப்பத்திரம் கனடா நாட்டின் ஒன்டோரியோவில் பிரபல சான்று அலுவலகர் ஸ்டிபன் ஹய் ஸ்பொர்சா STEPHEN GUY SFORZA என்பவரால் 2019.08.08 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்டு அதிகாரம் கையளிக்கப்படும் விசேட உரிமைப்பத்திரம் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி முதல் இதன் மூலம் இரத்துச் செய்வதுடன் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இலங்கை அரசுக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் இதன் மூலம் தெரியப்படுத்துகின்றோம் மற்றும் இந்த தற்காலிக உரிமைப்பத்திரம் தொடர்பாக இந்த திகதியிலிருந்து நான் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கமாட்டேன் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜினசிறி லால் மித்ர ஹேவாபதிரன.

12-720

---

### அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

முகுனுவடவன கொஹோபாவத்தையைச் சேர்ந்த நான், உடுகம்பலாகே தெல்மா அன்னே தில்ருக்ஷி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உள்ள பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் 2011.09.01 ஆந் திகதியிடப்பட்ட இல.166 ஐத் தாங்கிய அற்றோணித் தத்துவத்தை ஜேடிமலியால் சான்றளிக்கப்பட்டதை இரத்துச் செய்கின்றேன் மற்றும் ரணசிங்க ஆரச்சிலாகே இஷார சதுரனிக்கு வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கம் 887904634V ) இல.55, தோரணேகம,கல்னாவ, 2022, திசெம்பர் 26 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. எனது சட்டத்தரணி என்ற வகையில் ரணசிங்க ஆரச்சலகே இஷாரா சத்துராணி தெரிவித்தார்.

12-725

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புகுல்வெல்ல, ஹெட்டியாவல, பெலிகஹகெதர எனும் இடத்தில் வசிக்கும் ஹேவா விதாரனகே சாமிந்தா பிரியதர்சணி ஆகிய நான்,பகிரங்கநொத்தாரிசு திருமதிஎச்.கே.எஸ்.லும்பிணி அவர்களால் எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 396 கொண்ட 2017.05.08 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதற்கு தற்சமயம் நடவடிக்கை எடுத்துள்ளேன். அதன்படி அந்த அற்றோணித் தத்துவத்துக்குரியவரான பரண கமகே ரஞ்ஜித் ஆகியவரை 2021.12.10 ஆந் திகதி தொடக்கம் குறித்த தினத்தில் இருந்து நீக்கி இரத்துச் செய்வதாக அனைவருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

12-746

---

### வழக்கறிஞரின் அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல.165/1/B, துடுகெமுனு வீதி, கொஹுவல, நுகேகொட, இலங்கை எனும் முகவரியைச் சேர்ந்த துசெவ்நம்பி ஷாமினி ருவினிகா ராஜபக்ச மல்லிகா ஹேவா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவது யாதெனில், நான் வழக்கறிஞரின் அதிகாரத்தை இரத்துச் செய்துள்ளேன் என்பதை இதன் மூலம் தெரிவிக்கின்றேன். 2007.12.11 ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்டு 2007 ஆம் ஆண்டு நவெம்பர் 30 ஆந் திகதி இலக்கம் 134இல் நிரோதா பி. தசநாயக்கவினால் சான்றளிக்கப்பட்டு நான் வழங்கிய ஃபோலியோ 1763இன் அங்கீகாரம் பெற்ற நபர் புத்தகம் படி எண் 7516 மற்றும் அங்கீகாரம் பெற்ற நபர் புத்தகத்தின் கீழ் 2007.12.11 அன்று மேற்கு வலயம் கொழும்பு 7 பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து என்னால் இல. 165/1/B, துடுகெமுனு தெரு, கொஹுவெல, நுகேகொட, இலங்கையைச் சேர்ந்த துசெவ்நம்பி சமரசிறி ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற நபர் என்ற அதிகாரத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்கின்றேன். இனி மேல் கூறப்பட்ட வழக்கறிஞரின் அதிகாரத்தின்கீழ் அவர் செய்யும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பல்ல என்பதை இதன் மூலம் உறுதியளிக்கின்றேன்.

துசெவ்நம்பி ஷாமினி ருவினிகா
ராஜபக்ச மல்லிகா
ஹேவா.

12-684

---

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பெப்பிலியான, பெப்பிலியவல பாடசாலைக்கு முன்னால், இல.4/1/ஏ எனும் முகவரியில் வதியும் ரன்கிரி பத்திரன்னெ ஹெலாகே ஜேபின் நோனா ( தே.அ.அ.இல. 316440134V) ஆகிய என்னால் கப்புகொட, மாலிந்த இல. 112 எனும் முகவரியில் வதியும் ரன்கிரி பத்திரன்னெஹெலாகே சமன் நிலந்த (தே.அ.அ.இல. 721260062 V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ஆர்.பி. நிமல் தர்மதாச என்பவரால் 2018.10.01ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 5113 என்ற விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், அதன் பொது மக்களுக்கும்

இத்தால் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் ரன்கிரி பத்திரன்னெஹெலாகே சமன் நிலந்தவினால் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என மேலும் அறியத்தருகின்றேன்.

ரன்கிரி பத்திரன்னெ ஹெலாகே ஜேபின் நோனா .

12-685

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொரலஸ்கமுவ 10 ஆவது மைல்கல், இல. 400/1/A ஐச் சேர்ந்த நான், கங்கொடவிலகே ரேணுகா மல்காந்தி (தே.அ.அ.இல. 677151145V) சுதந்திர இலங்கை அரசுக்கும் ஏனைய பொது நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவிப்பதாவது, என்னால் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும் நொத்தாரிசுமான திரு. எம்.என். பிரீசன் பெர்ணான்டோ அவர்களால் உறுதி செய்யப்பட்ட 2017.08.15 ஆந் திகதியிடப்பட்ட இல. 7381 இன் மூலமாக என் சார்பாக நியமிக்கப்பட்ட தே.அ.அ.இல. 713180360V இல. 179/H/01, ரைகம் உயன, கொத்தலாவல, பண்டாரகம என்பவரை நியமித்து தெல்கந்த பதிவாளர் நாயக அலுவலகத்தில் இல. 28/208 தின இடாப்பு இல. 5098 மற்றும் 2019.09.14 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட மேற்படி அற்றோணித் தத்துவப் பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு நீக்கப்பட்டு / வலுவிலக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

கங்கொடவிலகே ரேணுகா மல்காந்தி ,
அற்றோணித்தத்துவப்பத்திர அனுமதியாளர்.

12-686

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் 95/ B, ருக்கஹவில,வல்பொல எனும் முகவரியில் வசிக்கும் கீதா குமுதினி ஹெட்டிஆரச்சி குணவர்தன ( தே.அ.அ.இல. 625532094V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு சட்டத்தரணி எரந்தனி சீ. குருப்பு அவர்களால் 2011.10.04 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய 891 ஆம் இலக்க அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் எனது அற்றோணி தத்துவகாரராக நிட்டம்புவ, ரன்பொக்குணகம CE 6/16 எனும் முகவரியில் வசிக்கும் நீதா தர்மனீ ஹெட்டிஆரச்சி குணவர்தன (தே.அ.அ.இல. 588130681V) என்பவரை நியமித்ததை 2021.12.17 ஆந் திகதி முதல் இத்தால் சட்டபூர்வமாக இரத்துச் செய்து வலுவிழக்கச் செய்துள்ளதாகவும் இதன்பின் அந்த அற்றோணி அதிகாரத்திற்கு எவ்வித சட்டபூர்வமான அங்கீகாரம் மற்றும் செல்லுபடித்தன்மையும் இல்லை என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

கீதா குமுதினி ஹெட்டிஆரச்சி குணவர்தன.

12-687

## விஷேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புத்தளம் மாவட்டத்தின், வைக்கால, மேற்கு அங்கம்பிட்டிய, இல. 197 எனுமிடத்தில் வசிக்கும் வர்ணகுலசூரிய அன்டன் டில்சான் ஹசந்த தமெல் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் அதன் மக்களுக்கும் சிலாபம் உயர் நீதிமன்ற வலயத்திற்குள் பகிரங்க நொத்தாரிசு ஐ.சீ. களுஆரச்சியினால் 2019.09.02 ஆந் திகதி எழுதி உறுதி செய்த இல. 12845 எனும் விசேட அற்றோணி அதிகாரத்தின் மூலம் நைனாமடம், மத்திய நைனாமடம், இல. 242/ A எனும் முகவரியில் வசிக்கும் கோட்டஹேவாகே தினேஷ் மதுசங்க பெர்னாண்டோ என்பவரால் எனக்கு ஒப்படைத்த அற்றோணி அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாகவும் மற்றும் இதன் பிறகு மேற்படி அற்றோணி அதிகாரத்தின் பிரகாரம் எந்த நடவடிக்கையும் என்னால் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், அங்கு குறிப்பிடப்படும் எந்த செயற்பாட்டிற்கும் என்னால் பொறுப்புக்கூற மாட்டாது எனவும் அறிவித்துக் கொள்கிறேன்.

வர்ணகுலசூரிய அன்டன் டில்சான் ஹசந்த தமெல் .

12-760

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வந்துராகல, அக்கரகனே மற்றும் தற்போது ஐக்கிய அமெரிக்காவின் மினசோட்டா 55409, மினியாபொலிஸ், பில்ஸ்பரி அவனியூ சவுத், 3839 எனும் முகவரியில் வசிக்கும் சமரசுந்தர சேனாநாயக்க முதியன்சேலாகே லிலியன் சுமித்ரா குமாரிஹாமி அல்லது சமரசுந்தர சேனாநாயக்க முதியன்சேலாகே லிலீ சுமித்ரா வந்துராகல அல்லது லிலியன் சுமித்ரா குமாரிஹாமி அல்லது லிலீ குமாரிஹாமி ( இலங்கை தேசிய அடையாள அட்டை இலக்கம் 436260474V/ ஐக்கிய அமெரிக்க கடவுச் சீட்டு இலக்கம் 673724717) ஆகிய நான்,பொது மக்களிடம் தெரிவித்துக்கொள்வது பிரசித்த நொத்தாரிசு வசந்த அமரசேகர என்பவரினால் 2011.02.015 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 15073 ஐக் கொண்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மினசோட்டா இல் பிரசித்த நொத்தாரிசு நிகோல் மேரி ப்லிசென்பெக் என்பவரால் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தின் ரணசிங்க முதியன்சேலாகே அனுர குமார ரணசிங்க என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதையும் அதற்கமைய அதிலே ரணசிங்க முதியன்சேலாகே அனுர குமார

ரணசிங்க என்பவரால் என் சார்பாக இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்படும் எவ்வித பணிக்கும் நான் பொறுப்பல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

12-742

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.79, ஹலதொருவ, எலபிடிவல, ராகம என்ற முகவரியில் வசிக்கும் அதுல ரன்ஜித் பாலசூரிய ஆகிய நான், எச்.எம்.பி.என். அபேரத்ன பிரசித்த நொத்தாரிசு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இங்கு குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக டாக்டர் விஜத தர்மபிரிய பரணகம (தே.அ.அ.இல. 68090481V) என்பவரை நியமனம் செய்யும் 2018.06.10 ஆந் திகதியிடப்பட்ட இல. 679 கொண்ட நாட்குறிப்பு இல. 14340, பக்கம் 39, தொகுதி 246 இன்கீழ் பத்தரமுல்லையிலுள்ள பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அதிகாரமளிக்கும் ஆவணத்தை இத்தால் இரத்துச் செய்து வலிதற்றதாக ஆக்குகின்றேன்.

அதுல ரன்ஜித் பாலசூரிய .

12-745

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஃபெயார்வே மினெர்வா ( பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இலக்கம் : 0122 1000 4600

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.20 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.12.12 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நூற்று நான்கு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 104,47,21,977.63) 2019, நவெம்பர் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நூறு கோடி ரூபா (ரூபா 100,00,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் (2.5%) கட்டணத்துடன் வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு இல. 1306 இன் மீது பெற்றுக் கொண்ட கூறப்பட்ட கடன் தொகைக்காக பிணையாக கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள் நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரார்களான கே.பீ.என்.சில்வா என்பவர்கள் மூலமாக 2022.01.13 ஆந் திகதி 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புறக்கோட்டை இல. C31 கிராம அலுவலர் பிரிவின் கேஹேல்வத்த வோட் இல. 18, அலுத்கடே இல் அமைந்த ஒல்கொட் மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 341, 341/1 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ஜீ. சீ. குலவன்ச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 47 -2013 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: ஒல்கொட் மாவத்தை இல. 331 ஐ ஏற்ற வளவுகள் (பொலிஸ் விடுதிகள்) மற்றும் ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 (மீஹீந்து வித்தியாலயம்) ; கிழக்கு : ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 (மீஹீந்து வித்தியாலயம்) எம். டீ. குணசேன மாவத்தை ; தெற்கு: வீதி மற்றும் ஒல்கொட் மாவத்தை மற்றும் மேற்கிற்கு: ஒல்கொட் மாவத்தை மற்றும் ஒல்கொட் மாவத்தை இல. 331 ஐ ஏற்ற வளவுகள் (பொலிஸ் விடுதிகள்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் மற்றும் ஐந்து தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ. 3றூ. 5.25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 47 - 2013 எனும் வரை படத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் X கீழே விபரிக்கப்பட்ட காணியின் உப பிரிவாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புறக்கோட்டை இல. C31 கிராம அலுவலர் பிரிவின் சென் செபஸ்த்தியன் வோட் இல் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 341 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். பொத்தேஜு என்பவரால் தயாரிக்கப்பட்ட 1946, நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 3 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து

எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வரிமதிப்பீட்டு இல. 331 (நொரிஸ் வீதி) பொலிஸ் விடுதிகள் ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 ட்றினிட்டி தேவாலய வளவு; கிழக்கு: லொட் C2; தெற்கு: லொட் D வரிமதிப்பீட்டு இல. 343 (நொரிஸ் வீதி); மற்றும் மேற்கு: (நொரிஸ் வீதி) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் மற்றும் இருபது பேர்ச் (1ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 181/122 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-660

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ .எல்.சீ. – சினமன் கார்டன்ஸ் கிளை**

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதி மிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

**கடன் எடுத்த ஏசியன் வங்கி இன்டநெஷனல் (பிரைவேட்) லிமிட்டெட் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பயாஸ்யின் 2016.04.29 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம்2884 மற்றும் 2016.07.23 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2884 மற்றும் 2016.07.23 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2981 இன் படி, பெற்றுக் கொள்ள உள்ள மிகுதி முற்பணம் வட்டிகள் மற்றும் குறிப்பிட்ட ஏலதாரரின் கொடுப் பனவில் அறவிடுவதற்காக, கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்களை என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் . ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சீ. மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,**

இக்கீழ் விபரிக்கப்பட்ட லொட் 1 மற்றும் லொட் 02 எனும் ஆதனங் களை என்னால், 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து, சல்பிட்டி கோரளையில் மஹரகம நகர சபை எல்லையில் மஹரகம மாவட்ட செயலாளர் எல்லையில் இலக்கம்: 532 கொடிகமுவ வடக்கு கிராம அலுவலர் எல்லையில் பொரலஸ்கமுவ கிராமத்தில் உள்ள அம்பகாவத்த காணிக்கு நில அளவையாளர் சி. பாதுக்கவின் 2014.06.14 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1728 காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் 01. இக்காணியின் விஸ்-தீரணம்: 0ஏ. 0று. 10.5பே.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து, சல்பிட்டி கோரளையில் மஹரகம நகர சபை எல்லையில் மஹரகம மாவட்ட செயலாளர் எல்லையில் இலக்கம் : 532 கொ-டிகமுவ வடக்கு கிராம அலுவலர் எல்லையில் பொரலஸ்கமுவ கிராமத்தில் உள்ள அம்பகாவத்த காணிக்கு நிலஅளவையாளர் சி. பாதுக்க 2014.06.14 ஆந் திகதியுடை வரைபட இலக்கம் 1728 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் 02, இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0று. 10.5பே.

இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2019.07.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.07.29ஆந் திகதியுடைய "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரி கைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்**.- இலக்கம்: 201/4, நல்லவத்த ரோட், மஹரகம

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா;
(6) ஏலத்திற்குச் செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(7) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்தப்படல் வேண்டும். தவறினால் கொடுக்கப்பட்ட 10% திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

இந்த ஏல விற்பனையானது கொவிட்-19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமை யான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

**வேறு விபரங்களுக்கு, முத்த முகாமையாளர் (அறவிடுதல்)**, ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல.: 011-2664664.

எல். பி. சேனாநாயக்க
(சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி இல. : 011-2396520, 011- 2396520
தொலைநகல் இல. : 011-2445393
மின்னஞ்சல் : senaservice @ sltnet.lk

12-667

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ- பாணந்துறை கிளை

பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) மூலம் எனக்களிக்கப்பட்டஅதிகாரத்தின் பிரகாரம்,*

**ஆதன இடாப்பு :**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை , பாணந்துறை தல்பிட்டி தெபேத்த, ஹெனெமுல்லையில் அமைந்துள்ள ஆதன போரஸ்ட் என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஏ.ஜி.சி. சிறிசோம அவர்களால் 2007.05.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 6920 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் A என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி.
காணியின் விஸ்தீரணம்: (ஏ.1றூ.0.63பே.) விசாலமுடைய காணியோடு, கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் அதில் அமைந்துள்ள சகலதும்.

கீழே காண்பிக்கப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்ட நீடிக்கும் பாதை உரிமையோடும்.

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை , பாணந்துறை தல்பிடி தெபேத்த, ஹெனெ முல்லையில் அமைந்துள்ள ஆதன போரஸ்ட் என அறிமுகப் படுத்தப்பட்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.கே.திருநாவுக்கரசு அவர்களால் 1968.01.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 590 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 13 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி. காணியின் விஸ்தீரணம்: (0ஏ.1றூ.7பே.)

2. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை , பாணந்துறை தல்பிடி தெபேத்த, ஹெனெமுல்லையில் அமைந்துள்ள ஆதன போரஸ்ட் என அறிமுகப்படுத்தப்பட்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.கே.திருநாவுக்கரசு அவர்களால் 1968.01.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 590 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் B2 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி.
காணியின் விஸ்தீரணம்: (0ஏ.1றூ.18பே.)

கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான, பாணந்துறை, கெசெல்வத்த, காலி வீதி, இல. 29 என்ற முகவரியில் அமைந்துள்ள சோலர் டயர் ட்றெட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட் கடனாளியாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் பேருவலதொடகே மேரி பொலின் சாந்தி பர்னாந்து மற்றும் பெம்மஹென்னதிகே ஷாமலா பிரசங்கி பர்னாந்து அடகுவைப்பாளராக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகுவைக்கப்பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட காணியை என்னால் 2022, சனவரி மாதம் 20 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2021.01.29 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2021.01.29ஆந் திகதிய 'திவயின', 'டெயிலி நியூஸ்' மற்றும் 'வீரகேசரி' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம் :**கெசெல்வத்த சந்தியிலிருந்து கொழும்பு- காலி பழைய வீதியூடாக கொழும்பு பக்கமாக 50 மீற்றர் வரை பயணம் செய்யும் பொழுது 30 அடி அகல பொது சேவை மாவத்தையில் (கொழும்பு வீதி,1 ஆவது ஒழுங்கை) இடது பக்கம் திரும்ப (கீல்ஸ் சுபர் தாண்டி) 75 மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது, தேவைப்படும் காணி இடது பக்கத்தில் முன்நோக்கி அமைந்துள்ளது.( வரிமதிப்பீட்டு இல. 13, கொழும்பு வீதி, 1 ஆவது ஒழுங்கை)

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10%, (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%, (3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%, (4) நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00, (5) இலிகிதர் கட்டணம் 500.00 ரூபா, (6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள், (7) VAT வரி, (8) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது பாணந்துறை கிளையில் செலுத்த வேண்டும்.

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சு மூலம் கொவிட் 19 சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெறும்.

**வேறு விபரங்களுக்கு கீழே குறிப்பிடப்படும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் :**

"கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 375, காலி வீதி, பாணந்துறை.தொலைபேசி இல. 038-2236808, தொலைநகல் இல.: 038-2234167.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான்,
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுபவர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
ஈ-மெயில் : senaservice84@gmail.com

12-661

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ**

**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

*கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மொஹமட் இஸ்மாயில் மொஹமட் அஷ்ரப் என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு* K.V.A.D.C.K. *விபுலசேன என்பவரால் 2016.06.29 ஆந் திகதி 1852 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடு வைக்கப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்படும் ஆதனம்.*

*2022.01.28 ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் விற்பனை செய்யப்படும்*

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி கங்கவட்ட கோரளை மற்றும் நான்கு கோரளை பிரதேச செயலாளர் பிரிவு கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல. 231 மஹவெலி உயன கிராமத்தில் அமைந்துள்ள "வட்டபுலுவ வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர்* A.S.M.*அஸ்வட் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.02.25 ஆந் திகதிய 5063 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் சமனல மாவத்தை வரிப்பண இல. 37/ 06 எனும் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது இருபத்தைந்து தசம் ஒன்று ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.25.19பே.) பரப்பளவானது.*

*வரைபட இல.* P.P Maha *508 இல் லொட் இல. 55 என அடையாளமிடப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியின் சகல உரிமையும் உண்டு.*

**ஆதனத்தை வந்தடைதல்:** *கண்டி நகரத்திலிருந்து கட்டுகஸ் தோட்டை பாதையில் சுமார் 2 கி.மீ. தூரம் சென்று அருப்பொல சந்தியில் வலதுபக்கமாக திரும்பி அருப்பொல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 4 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாக திரும்பி வட்டபுலுவ பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 1 கி.மீற்றர் தூரம் மஹவெலி உயன பாதை வரை வந்து அப்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாக திரும்பி அரலிய மாவத்தையூடாக சுமார் 150 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாகத் திரும்பி சமனல மாவத்தைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 150 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் வலது பக்கத்தில் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** *2021.03.12ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.03.16 ஆந் திகதிய 'டெய்லி நிவ்ஸ்'', ''லங்காதீப்'' மற்றும் ''வீரகேசரி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.-*** *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1500 ரூபா;*
*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3,000.00 ரூபா.*

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷன் பேங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**வேறு விபரங்களுக்கு:** *முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ , இல.375, கம்பளை ரோட் , காலி வீதி, பாணந்துறை.*
*தொலைபேசிஇல.: 054- 2223960, 2223961-2 .*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மடை,*
*கண்டி.*
*தொலைநகல் இல.: 081-2210595/071- 8446374, 071- 4962449*
*மின்னஞ்சல்:* wijeratnejayasuriya@ gmail.com

*12- 709*

---

**யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ**

**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

**அட்டவணை**

*தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை கடவத்சதர மற்றும் மாத்தறை மாநகர சபை எல்லையினுள் மாத்தறை*

பிரதேச செயலாளர் பிரிவில் இல. 417-C என்ற வல்பொல கிராம அலுவலர் பிரிவில், வல்பொலவில் அமைந்துள்ள ஸ்ரீ தர்மவங்சமாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 212 ( முன்னர் இல. 2143 ) என்ற ''அம்பகஹகொரடுவ'' இல்லது சபோகே அம்மாகே வத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜி.பி.திலகசிறி அவர்களால் அளந்து தாயரிக்கப்பட்ட இல. 15/2003 மற்றும் 2003.10.30 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி.

இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ.0றூ.36.80பே.) விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை ஆகிய அனைத்து சகலதும். இது மாத்தறைக் காணிப்பதிவு அலுவலகத்தில் A 637/144 மற்றும் A 637/137 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

